வேண்டுகோளுக்கிணங்க விரைவாக அதைப் பற்றி ஆலோசித்து, நிதிப் பிரச்சினை சீராகிற நேரத்திலே கண்டிப்பாக இதைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 225, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

225—

இராயமுண்டாம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*11085—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், வெண்டையம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட இராயமுண்டாம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கக் கோரி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 30,000 மக்கட்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்பது அரசின் கொள்கையாக உள்ளது. பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,01,213-க்கு ஏற்ப அங்கு ஏற்கனவே மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. எனவே இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைப்பதற்கில்லை.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதியில் இரண்டியமுண்டாம்பட்டி ஊராட்சியில் இராயமுண்டாம்பட்டி கிராமத்திலிருந்து ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க அரசுக்கு முறையீடு வந்துள்ளதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்தத் தகவலின்படி எந்த முறையீடும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் அதற்கு வினா எழுப்பியிருக்கிறார். வேறு எந்த முறையீடும் இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. எனவே, நான் ஏற்கனவே சொன்னபடி அந்த ஒன்றியத்தைப் பொறுத்த வரை இருக்கின்ற ஜனத்தொகைக்கு ஏற்ப, ஏற்கனவே கொள்கை ரீதிப்படி 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்று வைத்திருக்கிறோம். அதன்படி இப்பொழுது இருக்கிறது. எனவே, புதியதாக ஆரம்பிப்பதற்கு வாய்ப்பில்லையென தெரிவித்திருக்கிறேன். வேறு எந்த முறையீடும் அங்கிருந்து கிடைத்ததாகத் தகவல் இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு முறையீடு வரவில்லையென்று கூறுகிறார்கள். இங்கே இருக்கின்ற தலைமை ஆரம்பச் சுகாதார நிலையத்திலே அந்தக் கோரிக்கைகள் வரப்பட்டிருக்கின்றன. நானே அதை நேரில் பார்த்தேன். அதிலும் அந்தக் கிராமத்திலே ஏதாவது விஷம் தீண்டினாலும், பிரசவ காலங்களிலும் வெகு தொலை தூரத்திற்கு சென்று மருத்துவம் பெற வேண்டிய ஒரு நிலையிருக்கிறது. இங்கே 30 ஆயிரம் ஜனத்தொகை என்று கூறினார்கள். அந்த ஊராட்சியை சுற்றி பல ஊராட்சி மன்றங்கள், பல ஊர்கள் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது. எந்த வசதியும் இல்லாத அந்தப் பகுதிக்கு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க நமது ஒப்பற்ற தலைவி ஆட்சியில் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கே குறிப்பு இல்லையென்று தான் சொன்னேன். ஒருவேளை அங்கே வந்திருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஆனால், எனக்குக் கொடுத்தக் குறிப்பிலே அதைப்பற்றி எந்தப் புகாரும் மனுவும் வந்ததாக இல்லை. அந்த இடத்திற்கு புதியதாக ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம் ஒரு ஒன்றியத்தை ஒரு யூனிட்டாக நாம் எடுத்துக்கொள்கிறோம் அந்த யூனிட்டிலே எத்தனை ஜனத்தொகை இருக்கிறதோ, அந்த ஜனத்தொகைக்கு ஏற்ப 30 ஆயிரம் பேருக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிறதா என்று கணக்குப் பார்க்க முடியுமேயொழிய அதைச் சுற்றி எந்தெந்த ஊர்கள் இருக்கின்றன என்று பார்க்க முடியாது. காரணம் அது வேறு ஒறியத்தினுடைய ஊராக இருக்கும். அந்த ஒன்றியத்தோடு சேர்ந்துவிடும். எனவே, இதைப் பொறுத்தவரை ஏற்னெவே 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என்று நிலையிருக்கிற காரணத்தால் புதியதாக இப்பொழுது இந்த இடத்திற்கு ஆரம்பிக்க

முடியாத நிலையிருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற காரணத்தால், அதை எடுத்துப் பார்த்து எவ்வளவு தூரத்திற்கு அப்பால் மற்ற மருத்துவமனைகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்யலாமே யொழிய, ஆனால் அதிகமான மருத்துவமனைகள் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 226, திரு. காஞ்சி பன்னீர் செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

226—

காஞ்சீபுரம், செய்யாறு ஆகிய இடங்களுக்கும் இணைப்புப் பேருந்து இயக்குதல்.

*10043—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும்-வேலூருக்கும் இடையில் ஓடுகின்ற இணைப்புப் பேருந்தினை (Double-Bus) சென்னை-காஞ்சீபுரம், சென்னை-செய்யாறு ஆகிய இடங்களுக்கும் அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற சொல்லுக்கே இடம் இல்லாத ஒரு ஆட்சி இதயதெய்வம் புரட்சித் தலைவி தலைமையிலே நடந்து கொண்டிருக்கிறது. அதிலும் அவர் எண்ணு கின்ற எண்ணத்தை செய்துகொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எப்படி வேலூரிலிருந்து சென்னைக்கு இந்த இணைப்பு பேருந்து களை அனுப்பி அதிக மக்களை அதிலே ஏற்றுகின்ற அளவிலே நீங்கள் செய்திருக்கிறீர்களோ, அதைப்போல காஞ்சிபுரத்திலே யிருந்து செய்யார் பகுதியிலே நிறைய மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நிலையை போக்கு கின்ற அளவிலே, சென்னை வேலூர் பகுதியிலே ஓடுகின்ற இணைப்பு பேருந்தைப் போல இந்தப்பகுதியிலும் அப்படிப்பட்ட பேருந்துகளை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வாரா என அறிய விரும்புகிறேன்,